**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ம.எண்.1/2025 ன் அசல் வழக்கு எண்.28/2023</u>**

1. திரு. N.S. பாபு

2. திரு. வசந்த்

... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

..எதிர்..

1. கௌரி

2. திரு. பழனி

3. திரு. சரவணன்

... எதிர்மனுதாரர்கள் /வாதிகள்

இம்மனு 12.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. T. நாராயண், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. S. குணா மற்றும் S.ஆஷா ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:22:52 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 8 விதி 1-A (3) பிரிவு 151ன் கீழ் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்யவும், அவற்றை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் / 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:–

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஆவர். எதிர்மனுதாரர் / வாதிகளால் தனக்கும் மகனுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.186/2016 ன் வழக்குரையின் நகல் மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல், மேலும் தன்னாலும் தனது மகனாலும் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.248/2016 ன் வழக்குரையின் நகல் ஆகிய உடனிணைப்பு ஆவணங்கள், தனது வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆதாரங்களாகும். குறிப்பிட்ட ஆவணங்கள் மற்ற காகிதங்களுடன் கலந்துவிட்டதால், சமீபத்தில் தான் அவை கண்டுபிடிக்கப்பட்டன. ஆகையால், குறிப்பிட்ட ஆவணங்களை அவரது தரப்பில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுவது நியாயமானதும் அவசியமானதும் ஆகும். எனவே, உடனிணைப்பு கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்யவும், அவற்றை அவரது தரப்பில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவும் அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:22:57 +0530

3. <u>எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:—

மனுதாரரால் தாக்கல் செய்ய அனுமதி கோரப்படும் ஆவணங்கள், அசல் வழக்கு எண்.186/2016 மற்றும் அசல் வழக்கு எண்.248/2016 ஆகிய முந்தைய நடவடிக்கைகள் தொடர்பானவையாகும். அசல் வழக்கு எண்.186/2016 வழக்கு, பயனுள்ள விசாரணை எதுவுமின்றி, வழக்கின் மெய்ப்பொருள் குறித்த தீர்ப்பு ஏதுமின்றி திரும்பப் பெறப்பட்டது. அசல் வழக்கு எண்.248/2016 வழக்கு, ஆஜராகாமையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது (dismissed for default). இந்த ஆவணங்கள் நடைமுறையில் உள்ள வழக்குடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், திரும்பப் பெறப்பட்ட அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட நடவடிக்கைகள் இரு தரப்பினருக்கும் இடையிலான உரிமைகளைத் தீர்மானிக்காது மற்றும் அவை இந்திய சாட்சியச் சட்டத்தின் கீழ் ஆதாரப்பூர்வமான சாட்சியங்களாக அமையாது மேலும், இந்த ஆவணங்கள் வெறும் புகைப்பட நகல்களே தவிர, சாட்சியமாகக் குறிக்கப்பட முடியாது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:—

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**5.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:23:01 +0530

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பு வாதங்களையும் பொருத்து வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது எதிர்மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை உத்தரவு பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்களுக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்து எதிர்மனுதாரர் / வாதிகளால் தனக்கும் மகனுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.186/2016 வழக்கின் வழக்குரையின் நகல் மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல், மேலும் தன்னாலும் தனது மகனாலும் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.248/2016 ன் வழக்குரையின் நகல் ஆகிய உடனிணைப்பு ஆவணங்கள், தனது வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆதாரங்கள் என்றும் குறிப்பிட்ட ஆவணங்கள் மற்ற காகிதங்களுடன் கலந்துவிட்டதாகவும், சமீபத்தில் அவை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், ஆகையால், மனுவில் குறிப்பிட்ட ஆவணங்களை அவரது தரப்பில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு மனுதாரரால் தாக்கல் செய்ய அனுமதி கோரப்படும் ஆவணங்கள், அசல் வழக்கு எண்.186/2016 மற்றும் அசல் வழக்கு எண்.248/2016 ஆகிய முந்தைய நடவடிக்கைகள் தொடர்பானவையாகும். அசல் வழக்கு எண்.186/2016 வழக்கு, பயனுள்ள விசாரணை எதுவுமின்றி, வழக்கின் மெய்ப்பொருள் குறித்த தீர்ப்பு ஏதுமின்றி திரும்பப் பெறப்பட்டதாகவும் அசல் வழக்கு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:23:05 +0530

எண்.248/2016 வழக்கு, ஆஜராகாமையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் (dismissed for default). இந்த ஆவணங்கள் நடைமுறையில் உள்ள வழக்குடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், திரும்பப் பெறப்பட்ட அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட நடவடிக்கைகள் இரு தரப்பினருக்கும் இடையிலான உரிமைகளைத் தீர்மானிக்காது மற்றும் அவை இந்திய சாட்சியச் சட்டத்தின் கீழ் ஆதாரப்பூர்வமான சாட்சியங்களாக அமையாது என்றும் மேலும், இந்த ஆவணங்கள் வெறும் புகைப்பட நகல்களே தவிர, சாட்சியமாகக் குறிக்கப்பட முடியாதவை என்றும் எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள போதிலும் மனுதாரர்கள் / பிரதிவாதிகளை, ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதிப்பதாலேயே எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் அந்த ஆவணங்களின் செல்லுதன்மையை பொருத்தே அவை பரிசீலனைக்கு ஏற்கப்படும் என்கிற நிலையிலும் மனுதாரர்கள் அசல் அல்லது சான்றளிக்கப்பட்ட ஆவணங்களை மட்டுமே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்கிற நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:23:09 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:23:13 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.04.20 23:23:17 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ம.எண்.1/2025 ன்**
**அசல் வழக்கு எண்.28/2023**
**நாள் 16.04.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**